# சியபத பினான்ஸ் பீ.எல்.சீ

## முக்கிய தகவல்கள் அடங்கிய ஆவணம்

இந்த ஆவணத்தில் சியபத பினான்ஸ் பீ.எல்.சீ நிறுவனத்தினால் வழங்கப்படும் வசதிகள் / சேவைகள் பற்றிய முக்கிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள், அறவீடுகள், கட்டணத் திருத்தங்கள், சேர்த்தல்கள் அத்துடன் நீக்குதல்கள் எவற்றுக்குமான தற்றுணிபான அதிகாரத்தை நிறுவனம் கொண்டிருக்கும். இந்த முக்கிய தகவல்கள் அடங்கிய ஆவணமானது, 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கியின் பணிப்பின்கீழ் வழங்கப்பட்ட, உரிமம்பெற்ற நிதி நிறுவனங்களுக்கான நிதிசார் வாடிக்கையாளர் பாதுகாப்புச் சட்டகத்தின் தேவைப்பாட்டுக்கமைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

### 01. வசதிகளும் சேவைகளும்

#### I. லீசிங் (குத்தகை)

| | |
|---|---|
| **லீசிங் சேவைக்குரிய சின்னங்கள்** | |
| **சேவைகளின் விபரங்கள்** | • மைக்ரோ லீசிங் மற்றும் பொது லீசிங் நடைமுறைகளின் கீழ், தனிப்பட்ட மற்றும் வணிக நோக்கங்களுக்காக தனிநபர், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகம் அத்துடன் பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட லீசிங் வசதிகள்.<br>• பதிவு செய்யப்பட்ட/ பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனங்கள்/ SUV ரக வாகனங்கள்/ வேன்கள்/ வர்த்தகப் பயன்பாட்டுக்குரிய வாகனங்கள்/ பஸ் வண்டிகள்/ முச்சக்கர வண்டிகள்/ சிங்கிள் கெப் வண்டிகள்/ இலகு ரக ட்ரக் வண்டிகள்/ தரை வாகனங்கள்/ மோட்டார் சைக்கிள்கள், தெரிவு செய்யப்பட்ட இயந்திரங்கள், மற்றும் விவசாயத் தொழில்நுட்ப பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான லீசிங் வசதிகள். |

| | |
|---|---|
| **சேவைகளின் அம்சங்களும் நியதி நிபந்தனைகளும்** | • 18 வயதுக்கு மேற்பட்டவரும், செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை/ கடவுச்சீட்டை வைத்திருப்பவரும், இலங்கையில் வசிப்பவருமான ஆள் ஒருவர் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனம், திருப்பிச்செலுத்தும் இயலுமையைக் கொண்டிருப்பின், லீசிங் வசதியைக் கோருவதற்குத் தகுதியுடையவராவார்.<br>• ஆகக்குறைந்த கால எல்லை ஓராண்டு வரை மட்டுப்படுத்தப்பட்டதாகவும், ஆகக்கூடிய கால எல்லை 72 மாதங்கள் (06 ஆண்டுகள்) வரை நீடிக்கக்கூடியதாகவும் அமைந்திருக்கும்.<br>• லீசிங் வசதிக்கான பிணையானது ஆதனத்தின் முற்றுரிமையைப் பெற்றுக்கொள்வதாகும். அவசியமானால் உத்தரவாளர்களை இணைத்துக்கொள்ளவும் முடியும்.<br>• சியபத பினான்ஸ் நிறுவனத்திற்கு நிதி சார்ந்த வட்டியைச் செலுத்தி ஒவ்வோராண்டும், லீசிங் வசதி வழங்கப்படுகின்ற முழுக் காலப்பகுதிக்குமான பூரண காப்புறுதியைப் பெறலாம்.<br>• லீசிங் வசதி பரிசீலிக்கப்பட முன்னர், வாடிக்கையாளருக்கு நடைமுறையிலுள்ள வட்டிக் கட்டணம் பற்றி தெரிவிக்கப்படும்.<br>• கடன் வசதிகளுக்குரிய வட்டி வீதமானது வசதியின் வகை, காலம் மற்றும் வைக்கப்படுகின்ற பிணையில் தங்கியிருக்கும். சந்தை நிலவரங்களின் அடிப்படையில் வட்டி வீதம் காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம்.<br>• நிறுவனமானது நெகிழ்வான மீளச்செலுத்தும் தெரிவுகளை வழங்குகின்றது. ஏற்கனவே உடன்பட்டுக்கொண்ட விதமாக சம தவணைக் கட்டணங்கள் அல்லது கட்டமைக்கப்பட்ட முறையில் மீளச் செலுத்துதல்.<br>• லீசிங் உடன்படிக்கையை நிறைவேற்ற முன்னர், மாதாந்தத் தவணைக் கட்டணமும் வேறு அறவீடுகளும் திட்டவட்டமாக அறிவிக்கப்படும். எமது அலுவலர்கள் மூலமாக முன்கூட்டியே எல்லா நியதி நிபந்தனைகளும் பற்றிய தெளிவைப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகும்.<br>• வட்டி வீதம், அறவீடுகள், லீசிங் வசதியின் பெறுமதி, திருப்பிச் செலுத்தும் கால எல்லை, பிணைக்கான தேவைப்பாடுகள் அத்துடன் விசேட நியதி நிபந்தனைகளும் |

| | |
|---|---|
| | வசதியின் தன்மைக்கேற்ப ஒன்றுக்கொன்று வேறுபடலாம். உடன்படிக்கையை நிறைவேற்ற முன்னர், கடன்பெறுநருக்கு வழங்கப்படும் முன்வைப்புக் கடிதத்தின்மூலம் எல்லா நியதி நிபந்தனைகள் குறித்தும் விழிப்புணர்வூட்டப்படும். |
| **லீசிங் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைமுறை** | ⦿ முதலாவதாக, சேவையிலுள்ள அம்சங்கள், அவற்றுக்கான தேவைப்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரை கடன்பெறுநர் சந்திக்க வேண்டும்.<br><br>⦿ அச்சந்திப்பின் பின்னர், கடன்பெறுநர் மற்றும் நிறுவனத்தின் பிரதிநிதி ஆகியோர் குறித்த சேவையுடன் சம்பந்தப்பட்ட நியதி நிபந்தனைகள் பற்றிக் கலந்துரையாடுவர்.<br><br>⦿ கடன்பெறுநர், உரிய விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூரணப்படுத்தி தேவைப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களுடன் சேர்த்து அதனை நிறுவனத்தின் பிரதிநிதியிடம் ஒப்படைக்க வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் கிடைத்த பின்னர், கடன்பெறுநரால் கோரப்பட்டுள்ள லீசிங் வசதியின்/ சேவையின் வகை அடிப்படையில் நிறுவனத்தால் அது உரிய செயன்முறைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.<br><br>⦿ அங்கீகாரம் பெறப்படும் செயல்முறையின்போது, மேலதிகத் தகவல்கள், ஆவணங்கள் அல்லது கடன் பகுப்பாய்வின் அடிப்படையிலான தகவல்களைப் பெற வாடிக்கையாளருடன்/ உத்தரவாளர்களுடன் தொடர்பு கொள்ளப்படும்.<br><br>⦿ ஆரம்பத்தில் கலந்துரையாடப்பட்ட நியதி நிபந்தனைகள் அங்கீகாரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் திருத்தப்படலாம் என்பதால், நிறுவனமானது லீசிங் வசதியை தயார்படுத்த முன்னர் அதுபற்றி விண்ணப்பதாரருக்கு அறிவிக்கும்.<br><br>⦿ நிறுவனமானது லீசிங் வசதிக்கான அங்கீகாரத்தை வழங்கும் போது, அவசியமான சட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, அவை முழுமைப்படுத்தப்பட்ட பின்னரே அத்தகைய வசதி வழங்கப்படும்.<br><br>⦿ லீசிங் வசதியொன்றுக்கு அங்கீகாரமளிக்கும் அல்லது அவ்வசதியை நிராகரிக்கும் முழு அதிகாரம் நிறுவனத்துக்கு |

| | |
|---|---|
| | உண்டு. |

## II. தங்கக் கடன் வழங்குதல்

| | |
|---|---|
| **தங்கக் கடன் சேவைக்குரிய சின்னங்கள்** | |
| **தங்கக் கடன் பற்றிய விபரங்கள்** | ⦿ சியபத பினான்ஸ் நிறுவனத்தில் தனிநபர்களும் வர்த்தக நிறுவனங்களும் தங்க ஆபரணங்களை அடகு வைத்து கடன் வசதியைப் பெறமுடியும்.<br>⦿ பகுதி பகுதியாகக் கடனை மீளச் செலுத்தும் வசதி உண்டு.<br>⦿ தேவைக்கேற்ப பகுதி பகுதியாக தங்க ஆபரணங்களை மீட்கவும் முடியும்.<br>⦿ உங்களுடைய பெறுமதியான தங்க ஆபரணங்களுக்கு உயர் எதிர்பார்ப்பு, நம்பிக்கை மற்றும் 100% இலவசக் காப்புறுதிக் காப்பீடு என்பன வழங்கப்படும். |
| **தங்கக் கடன் சேவையின் அம்சங்களும் நியதி நிபந்தனைகளும்.** | ⦿ 18 வயதுக்கு மேற்பட்டவரும், செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை/ கடவுச்சீட்டை வைத்திருப்பவரும், இலங்கையில் வசிப்பவருமான ஆள் ஒருவர் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனம், திருப்பிச்செலுத்தும் இயலுமையைக் கொண்டிருப்பின், தங்கக் கடன் வசதியைக் கோருவதற்குத் தகுதியுடையவராவார்.<br>⦿ தங்கக் கடன் வசதியைப் பெற்றுக்கொள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை / சாரதி அனுமதிப் பத்திரத்தை/ கடவுச்சீட்டை வழங்க வேண்டும்.<br>⦿ குறைந்தபட்ச கடன் முற்பணம் ரூபா 1000/- ஆகும்.<br>⦿ வாடிக்கையாளரின் தெரிவுக்கமைய சாதாரண தங்கக் கடனை 1 - 12 மாதங்களிலும், வியாபார தங்கக் கடன் வசதிகளை 1, 3, 6 மற்றும் 12 மாதங்களிலும் இலகுவான முறையில் |

| | |
|---|---|
| | திருப்பிச் செலுத்தலாம்.<br><br>- அடகு வைக்கப்படும் தங்க ஆபரணத்தின் பெறுமதியினதும் அதன் தற்போதைய சந்தைப் பெறுமதியினதும் அடிப்படையில் கடனுக்கான முற்பணம் தீர்மானிக்கப்படும்.<br><br>- உரிய வட்டி வீதம் பற்றி வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கப்படும்.<br><br>- கடன் வசதிகளுக்குரிய வட்டி வீதமானது அக்கடன் வசதியின் வகை, கடனை அனுபவிக்கும் காலப்பகுதி மற்றும் வைக்கப்படும் பிணை என்பவற்றில் தங்கியிருக்கும். சந்தை நிலவரங்களின் அடிப்படையில் வட்டி வீதம் காலத்திற்குக் காலம் திருத்தப்படும்.<br><br>- ஒப்பந்தக் கால எல்லையின் எத்தருணத்திலும் தங்க ஆபரணங்களை மீட்டுக்கொள்வதற்கான அல்லது புதுப்பித்துக்கொள்வதற்கான இயலுமை வாடிக்கையாளருக்கு உண்டு.<br><br>- 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அடகுச் சட்டத்தின் பிரகாரம் அடகு வைக்கப்பட்ட பொருட்களின் நிமித்தம் கடன்பெறுநர் அடகுக்கான உறுதிப்பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும்.<br><br>- ஒப்பந்தக் கால எல்லையினுள் மீட்கப்படாத அல்லது ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் பற்றி வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்திய பின்னர், அடகுச் சட்டத்தின் நியதிகளின்படி அவை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.<br><br>- வட்டி வீதம், அறவீடுகள், கடன் வசதியாக வழங்கப்படும் தொகை, திருப்பிச் செலுத்தும் கால எல்லை, பிணைக்கான தேவைப்பாடுகள் அத்துடன் விசேட நியதி நிபந்தனைகள் போன்ற பிரதான நியதி நிபந்தனைகளும், கடன் வசதியின் தன்மைக்கேற்ப ஒன்றுக்கொன்று வேறுபடலாம். உடன்படிக்கையை நிறைவேற்ற முன்னர், கடன்பெறுநருக்கு வழங்கப்படும் முன்வைப்புக் கடிதத்தின் மூலம் எல்லா நியதி நிபந்தனைகள் பற்றியும் விழிப்புணர்வூட்டப்படும். |

| | |
|---|---|
| **தங்கக்கடன் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைமுறை** | ⊙ உரிய கடன்பெறுநர் வங்கிக் கிளைக்குச் சென்று தங்கக் கடன் வசதியைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.<br>⊙ வங்கிக் கிளையிலுள்ள பணியாளர்களினால் தங்கக் கடன் கொடுக்கல்வாங்கலுக்கான தகைமை பற்றி மதிப்பீடு செய்யப்படும்.<br>⊙ பணியாளர்களினால் தங்கம், தங்க ஆபரணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றுக்கான விலை நிச்சயிக்கப்பட்ட பின்னர், நிறுவனத்தின் மதிப்பீட்டு அளவுகோல்கள்களின் அடிப்படையில் குறித்த ஆபரணங்களுக்காக வழங்க முடியுமான தொகை பற்றி வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்தப்படும்.<br>⊙ அவ்வாறு தெரியப்படுத்தப்படும் தொகையுடன் வாடிக்கையாளர் இணங்கினால் அவருக்கான தங்கக் கடன் வசதி வழங்கப்படும். |

## III. நிலையான வைப்புகள்

| | |
|---|---|
| **நிலையான வைப்புச் சேவைகளின் சின்னம்** | Siyapatha Finance FIXEDEPOSITS The true stability in your life's journey |
| **சேவை பற்றிய விபரங்கள்** | ⊙ நிலையான வைப்புச் சேவை மூலம் வாடிக்கையாளர்களின் பணம் நிறுவனத்தில் வைப்புச் செய்யப்படுவதுடன், உரிய காலப்பகுதிக்குப் பொருத்தமான வட்டி வருமானத்தை மீளச் செலுத்தும் வசதியும் உண்டு. நிறுவனத்தில் பணம் வைப்புச் செய்யப்பட்டு அதன் பெறுமதி பாதுகாக்கப்படும்.<br>⊙ நாம் சம்பத் வங்கிக் குழுமத்தின் மிகப் பெரிய துணை நிறுவனமாக இருப்பதால், நீங்கள் பாடுபட்டு உழைத்த பணத்திற்கு ஸ்திரத்தன்மை, சேவை மற்றும் நலன்கள் உறுதிசெய்யப்பட்ட பாதுகாப்பான சேவை வழங்கப்படும்<br>⊙ இலங்கை மத்திய வங்கியின் உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கு இணையாக கவர்ச்சியான வட்டி வீதமும் துரித சேவையும் நிறுவனத்தால் வழங்கப்படும். |

| | |
|---|---|
| | ⦿ உங்கள் நிலையான வைப்பின் அடிப்படையில், உங்கள் வைப்புப் பெறுமதியிலிருந்து 80% ஐ தனிநபர் கடனாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கலாம். (பணம் மீளக் கிடைக்கும் கடன்) உங்கள் நிலையான வைப்புத்தொகைக்கு எதிராக தனிநபர் கடனை ஏற்பாடு செய்யலாம் மற்றும் LTV விகிதம் அவ்வப்போது நிறுவனத்தால் தீர்மானிக்கப்படும்.<br>⦿ நிலையான சேமிப்புக் கணக்கு இடைநிறுத்தப்படும்போது அதில் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகை, வட்டி வருமானம் அல்லது திரண்ட வட்டி வாடிக்கையாளருக்குச் சொந்தமான சேமிப்புக் கணக்கில் மட்டும் வரவு வைக்கப்படும். |
| **நிலையான வைப்புச் சேவையின் அம்சங்களும் நியதி நிபந்தனைகளும்** | ⦿ வைப்பாளர் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜையாக அல்லது வதிவிட வீசா உடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையை / கடவுச் சீட்டை வைத்திருக்கவும் வேண்டும்.<br>⦿ தனியாக அல்லது அதிகபட்சமாக இரண்டு பேர் வரை கூட்டுக் கணக்கொன்றை ஆரம்பித்து வைப்புச் செய்ய முடியும்.<br>⦿ வர்த்தக நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்களின் வைப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படும். (உதாரணம்: சங்கங்கள், நிதியம், அறக்கொடை அமைப்புகள் போன்றன).<br>⦿ ஆகக்குறைந்த வைப்புத் தொகை ரூபா 10,000/- ஆகும்.<br>⦿ வைப்புக் காலம் 1 தொடக்கம் 60 மாதங்கள் வரையாகும்.<br>⦿ வாடிக்கையாளரது விருப்பத்தின்படி முதிர்வின்போது அல்லது மாதாந்த அடிப்படையில் வட்டி செலுத்தப்படும்.<br>⦿ வைப்பாளர் ஒருவர் நியமத்தர்களின் பட்டியலில் அதிகபட்சமாக மூவரை நியமிக்க முடியும்.<br>⦿ இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் உளவறிதல் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளதன்படி, வைப்பாளர்கள் / வைப்புச் செய்துள்ள நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்களால் கோரப்படுகின்ற தகவல்களை எவரேனும் வைப்பாளர் வெளிப்படுத்தாவிட்டால் அத்தகைய எந்தவொரு வைப்புத் தொகையையும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரிமை சியபத பினான்ஸ் நிறுவனத்திற்கு உண்டு.<br>⦿ இலங்கை மத்திய வங்கியின் ஆகக்கூடிய வட்டி வீதங்களுக்கு அமைவாக, முதிர்வுக்கு முன்னர் திரும்பப் |

| | |
|---|---|
| | பெறும்போது ஒப்பந்த வட்டி செலுத்தப்படமாட்டாது என்பதுடன், அதனை செயற்படுத்தும் உரிமை சியபத பினான்ஸ் நிறுவனத்திற்கு உண்டு.<br>⦿ வைப்பு மூடப்படும்போது அந்த நிதி வைப்பாளரின் கணக்கிற்கு மட்டும் மாற்றப்படும்.<br><br>**வட்டி வீதமும் கொடுப்பனவும்**<br>⦿ தற்போதை வட்டி வீதங்களை அறிந்துகொள்ள தயவுசெய்து பின்வரும் இணையத்தள முகவரியில் சியபத பினான்ஸ் இணையத் தளத்தைப் பார்க்கவும்.<br>https://www.siyapatha.lk/fixed-deposits/<br>⦿ வாடிக்கையாளரின் விருப்பத்தின்பேரில் மாதாந்தம் அல்லது முதிர்வின்போது வட்டி செலுத்தப்பட முடியும். எளிய வட்டி வீத முறையெனில், வட்டியானது திரண்ட அடிப்படையில் நிலையான வைப்புக் கால எல்லையின் முடிவில் கணிக்கப்பட்டு முதிர்வின்போது செலுத்தப்படும். மாதாந்தம் வட்டி கோரப்படுமானால் எளிய வட்டி வீத முறையில் வட்டி கணிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் குறித்த திகதியில் செலுத்தப்படும்.<br><br>**தானாக புதுப்பிக்கப்படுதல்**<br>⦿ முதிர்வுத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் புதுப்பிக்கப்படுதல் அல்லது மீளப்பெறும் நியதிகளுக்கு இணங்க நிகழும் ஏதேனும் மாற்றம் பற்றி கம்பெனிக்குத் தெரியப்படுத்தாவிட்டால், இந்த வைப்பில் வட்டி உள்ளடக்கப்படுவதோடு அத்தகைய ஒரு காலப்பகுதிக்காக அத்திகதியன்று நடைமுறையிலுள்ள வட்டி வீதத்துடன் அது புதுப்பிக்கப்படும்.<br><br>**வரியை வரவு வைத்தல்**<br>⦿ நிலையான வைப்புக்குரிய வட்டியானது நடைமுறையிலுள்ள பிடித்துவைத்தல் வரி (WHT) சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டது. கம்பெனிகள் / பிற நிறுவனங்கள் ஈட்டும் வட்டி வருமானம் வருமான வரிக்கும் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய |

| | |
|---|---|
| | வரிகளுக்கும் உட்படலாம்.<br><br>**வைப்புக் காப்புறுதி**<br><br>⦿ வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூபா 1,100,000/- தொகை நட்டோத்தரவாதமாக நாணயச் சபையினால் செயற்படுத்தப்படுகின்ற, இலங்கை வைப்புக் காப்புறுதி நடவடிக்கை முறையுடன் தகுதிவாய்ந்த வைப்புக்கள் காப்புறுதி செய்யப்படும்.<br><br>**கூட்டு வைப்புக்கள்**<br><br>⦿ சிரேஷ்ட பிரஜைகளின் கூட்டுக் கணக்குகளுக்கு இணங்க சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டி வீதத்தைப் பெற்றுக்கொள்ள, கணக்கு வைத்திருக்கும் அனைவரும் சிரேஷ்ட பிரஜைகளாக இருக்க வேண்டும்.<br><br>⦿ கூட்டுக் கணக்கொன்றின் வைப்பாளர் ஒருவர் இறக்கும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக நிறுவனத்துக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நிறுவனமானது, வைப்புக்கான வட்டியை உயிருடன் இருக்கின்ற நபருக்கு மட்டுமே வழங்கும்.<br><br>**நிலையான வைப்பு மீதான கடன்**<br><br>⦿ முகாமைத்துவத்தின் விருப்பத்தின் பேரில் வைப்பாளருக்கு தனது வைப்பின் அடிப்படையில் கடனைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், அத்தகைய கடன்களுக்கு கம்பெனியின் முழு அதிகாரத்தின்படி, நடைமுறையிலுள்ள வீதங்களுக்கு உட்பட்டதாக வட்டியும் ஏனைய அறவீடுகளும் மேற்கொள்ளப்படும்.<br><br>**இயங்கா நிலையிலுள்ள கணக்குகள்**<br><br>⦿ கைவிடப்பட்ட நிலையான வைப்புக்களுக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்ட நடைமுறை பின்பற்றப்படும். அதிகபட்சமாக 10 வருட காலப்பகுதியில் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கடிதப் பரிமாற்றங்கள் நடைபெறாத வைப்புக்கள் இயங்கா நிலையிலுள்ள கணக்குகளாகக் கருதப்படும். அத்துடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின்படி அத்தகைய கணக்குகளை இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிட வேண்டும். |

| | |
|---|---|
| **நிலையான வைப்புச் சேவையை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைமுறை** | ⊙ நிலையான வைப்புச் சேவை வசதிகள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள வாடிக்கையாளர் வங்கிக் கிளைக்குச் சென்று அங்குள்ள பணியாளர் பிரதிநிதியைச் சந்திக்க வேண்டும்.<br>⊙ முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம், வாடிக்கையாளர்களை அறிந்துகொள்ளும் கூட்டுப்பொறிமுறை (KYC) மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்கள் என்பன பெறப்பட்ட பின்னர் கணக்கு திறக்கப்படும்.<br>⊙ அவசியமான எல்லாத் தகவல்களையும் மெய்யுறுதிப்படுத்திய பின்னர், விண்ணப்பம் உரிய செயன்முறைப்படுத்தலுக்காக அனுப்பப்படுவதோடு வாடிக்கையாளருக்கு நிலையான வைப்புச் சான்றிதழொன்றும் வழங்கப்படும். |

## IV. சேமிப்பு

| | |
|---|---|
| **சேமிப்புச் சேவைகளின் சின்னங்கள்** | |
| **சேமிப்புச் சேவைகள் பற்றிய விபரங்கள்** | ⊙ தேவை ஏற்படும்போது சேமிப்புக் கணக்கிற்கு பணத்தை மீளப்பெறும் வசதியை உறுதிசெய்து, சியபத பினான்ஸ் மூலம் *சியபத கிருல*, *சியபத அபிமன்*, *சியபத சேவர்* மற்றும் *சியபத ப்ளஸ்* போன்ற பலவகையான சேமிப்புச் சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.<br>⊙ *சியபத சேவர்* என்பது சாதாரண சேமிப்புக் கணக்காகும் என்பதுடன், *சியபத ப்ளஸ்* என்பது விருத்தியடையும் சேமிப்புக் கணக்குமாகும். மேலும், *சியபத கிருல* என்பது சிறுவர் சேமிப்புக் கணக்காகும் என்பதுடன், *சியபத அபிமன்* என்பது சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்குமாகும்.<br>⊙ கணக்கு மீதிக்கும் சேமிப்புக் கணக்கின் தன்மைக்கும் அமைய, செலுத்த முடியுமான வட்டி வீதம் வேறுபடும். |
| **சேமிப்புச் சேவையின் அம்சங்களும் நியதி நிபந்தனைகளும்** | ⊙ வைப்பாளர் 18 வயதுக்கு மேற்பட்ட, இலங்கைப் பிரஜையாக அல்லது வதிவிட வீசா உடையவராக இருக்க வேண்டும் என்பதுடன், அவர் செல்லுபடியாகும் தேசிய |

| | |
|---|---|
| | அடையாள அட்டையை / கடவுச் சீட்டை வைத்திருக்கவும் வேண்டும்.<br>⦿ தனியாக அல்லது அதிகபட்சமாக மூன்று பேர் இணைந்து கூட்டுக் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.<br>⦿ வர்த்தக நிறுவனங்களின் அல்லது பிற நிறுவனங்களின் வைப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படும். (உதாரணம்: சங்கங்கள், நிதியம், அறக்கொடை அமைப்புக்கள் போன்றன).<br>⦿ ஆகக்குறைந்த வைப்புத் தொகை ரூபா 1000/- ஆகும்.<br>⦿ நாளந்தம் எல்லா சேமிப்புக் கணக்குகளுக்குமான வட்டி கணிக்கப்பட்டு எளிய வட்டி அடிப்படையில், வருடாந்தம் விலை முன்வைக்கப்பட்டு அது மாதாந்தம் கணக்கில் வரவு வைக்கப்படும். ஆகக்கூடிய வட்டி வீதமானது இலங்கை மத்திய வங்கியின் வட்டி வீதங்களுக்கு மேற்படாதவையாக இருக்கும்.<br>⦿ புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கு அல்லது 18 வயதுக்குக் குறைவான பிள்ளைகளுக்கு அவர்களின் தாய் / தந்தை அல்லது சட்டமுறையான பாதுகாவலர் அடிப்படைக் கணக்குரிமையாளராக இருந்து பராயமடையாதோருக்கான கணக்கொன்றைத் திறக்கலாம்.<br>⦿ இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் உளவறிதல் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளதன்படி, வைப்பாளர்கள் / வைப்புச் செய்துள்ள நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்களால் கோரப்படுகின்ற தகவல்களை எவரேனும் வைப்பாளர் வெளிப்படுத்தாவிட்டால் அத்தகைய எந்தவொரு வைப்புத் தொகையையும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரிமை சியபத பினான்ஸ் நிறுவனத்திற்கு உண்டு. |

| | |
|---|---|
| **சேமிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைமுறை** | ⊙ சேமிப்பு வசதிகள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள வாடிக்கையாளர் வங்கிக் கிளைக்குச் சென்று அங்குள்ள பணியாளர் பிரதிநிதியைச் சந்திக்க வேண்டும்.<br>⊙ முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம், வாடிக்கையாளர்களை அறிந்துகொள்ளும் கூட்டுப்பொறிமுறை (KYC) மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்கள் என்பன பெறப்பட்ட பின்னர் கணக்கு திறக்கப்படும்.<br>⊙ அவசியமான எல்லாத் தகவல்களையும் மெய்யுறுதிப்படுத்திய பின்னர், விண்ணப்பமானது செயன்முறைப்படுத்தலுக்காக அனுப்பப்பட்டு, அதன் பின்னர் வாடிக்கையாளருக்கு சேமிப்புக் கணக்குப் புத்தகம் (Pass Book) வழங்கப்படும். (வேண்டுகோளின் அடிப்படையில் மாத்திரம்)<br><br>**வட்டி வீதங்கள்**<br>⊙ தற்போதை வட்டி வீதங்களை அறிந்துகொள்ள தயவுசெய்து பின்வரும் இணையத்தள முகவரியில் சியபத பினான்ஸ் இணையத்தளத்தைப் பார்க்கவும்.<br>https://www.siyapatha.lk/fixed-deposits/<br><br>**வரியை வரவு வைத்தல்**<br>⊙ சேமிப்பு கணக்குக்குரிய வட்டியானது நடைமுறையிலுள்ள பிடித்துவைத்தல் வரி (WHT) சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டது. கம்பெனிகள் / பிற நிறுவனங்கள் ஈட்டும் வட்டி வருமானமானது வருமான வரிக்கும் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய வரிகளுக்கும் உட்படலாம்.<br><br>**வைப்புக் காப்புறுதி**<br>⊙ வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூபா 1,100,000/- தொகை நட்டோத்தரவாதமாக நாணயச் சபையினால் செயற்படுத்தப்படுகின்ற, இலங்கை வைப்புக் காப்புறுதி நடவடிக்கை முறையுடன் தகுதிவாய்ந்த வைப்புக்கள் காப்புறுதி செய்யப்படும்.<br><br>**கூட்டு வைப்புக்கள்**<br>⊙ சிரேஷ்ட பிரஜைகளின் கூட்டுக் கணக்குகளுக்கு |

| | |
|---|---|
| | இணங்க சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டி வீதத்தைப் பெற்றுக்கொள்ள, கணக்கு வைத்திருக்கும் அனைவரும் சிரேஷ்ட பிரஜைகளாக இருக்க வேண்டும்.<br>⊙ கூட்டுக் கணக்கொன்றின் வைப்பாளர் ஒருவர் இறக்கும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக நிறுவனத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நிறுவனமானது, வைப்புக்கான வட்டியை உயிருடன் இருக்கின்ற நபருக்கு மட்டுமே வழங்கும்.<br><br>**இயங்கா நிலையிலுள்ள கணக்குகள்**<br>• கைவிடப்பட்ட சேமிப்புக் கணக்குகள் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் நிலையான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றும்.<br>2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டத்தின்படி, 01 வருட காலத்திற்கு பரிவர்த்தனை அல்லது கடிதத் தொடர்புகள் இல்லாத சேமிப்புக் கணக்குகள் செயலற்றதாகக் குறிப்பிடப்பட்டு, அதிகபட்சமாக 10 வருட காலத்திற்குப் பிறகு இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும்.<br><br>ஏனைய பொருந்தக்கூடிய எல்லா நிபந்தனைகளும், சேமிப்புக் கணக்கைத் திறப்பதற்கான விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. |

## V. கடன் காரணிப்படுத்தல்

| | |
|---|---|
| **கடன் காரணிப்படுத்தல் சேவையின் சின்னம்** | Siyapatha Finance<br>Sfactor<br>Unbank with us |
| **கடன் காரணிப்படுத்தல் சேவை பற்றிய விபரம்** | ⊙ வர்த்தக நிறுவனங்களின் தொடக்க மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் கடன் காரணிப்படுத்தல் வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இன்வொய்ஸ் கடன் காரணிப்படுத்தல், கடன்பெறுநரின் காசோலைக் கழிவு போன்ற வசதிகளை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்கும் பெற்றுக்கொள்ள முடியும். |

## VI. பாஸ்ட் டிரா.ஃப்ட

| | |
|---|---|
| **சேவைக்குரிய சின்னம்** | |
| **சேவை பற்றிய விளக்கம்** | சியபத ‘Fast Draft’ என்பது வங்கியில் மிகைப்பற்று போன்ற சுழல் கடனாக வழங்கப்படும், அங்கு வழங்கப்படும் பாதுகாப்பின் மதிப்பீட்டைக் கருத்தில் கொண்டு வரம்பை நாங்கள் வழங்குகிறோம்.<br><br>‘Fast Draft’ ஆனது பதிவு செய்யப்படாத/பதிவுசெய்யப்பட்ட மோட்டார் கார்கள், SUVகள், வேன்கள், வணிக வாகனங்கள், பேருந்துகள், முச்சக்கர வண்டிகள், ஒற்றை Cabகள், இலகுரக டிரக்குகள் போன்ற பலதரப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்படுகின்றன. |
| **சேவையின் அம்சங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | சொத்தின் புறம் அகற்றும் மதிப்பின் (YDV) அடிப்படையில் அதிகபட்ச கடன் வெளிப்பாடு வரை, 12 மாதங்களுக்கு ஒரு மோட்டார் வாகனத்திற்கான வரம்பு அங்கீகரிக்கப்படும்.<br><br>வாடிக்கையாளர் 12 மாத காலப்பகுதியில் வழங்கப்பட்ட தொகைக்கான குறைந்தபட்ச கட்டணமாக மாதந்தோறும் வட்டிப்பகுதி மற்றும் மூலதனத்தின் ஒரு பகுதியை (முடிந்தால்) செலுத்தவேண்டும்.<br>முதிர்ச்சியின் போது, வாடிக்கையாளர் டொப்-அப் மதிப்புடன் அல்லது இல்லாமல் வசதியைப் புதுப்பிக்கலாம், அல்லது நிலுவையில் உள்ள மொத்தத் தொகையைச் செலுத்தலாம்.<br><br>அங்கீகரிக்கப்பட்ட வசதி வரம்பு 11வது மாதத்தில் மதிப்பாய்வு செய்யப்படும், மேலும் வசதியின் மதிப்பை மேம்படுத்துதல், குறைத்தல், தொடர்தல் அல்லது நிறுத்துதல் தொடர்பான முடிவை நிறுவனம் எடுக்கலாம்.<br><br>வாடிக்கையாளர் வரம்பிற்குள் இடைக்காலத் தொகையை கோரலாம் மேலும் அவை ஒவ்வொன்றும் அங்கீகரிக்கப்பட்ட வரம்பின் கீழ் தனித்தனியாகக் கருதப்படும். வாகனத்தின் உள்ளக மதிப்பீடு நிறுவனத்தின் உள்ளக மதிப்பீட்டாளரால், குறித்த திகதியின் சந்தை மதிப்பு மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் நிலுவையில் உள்ள மூலதனத்தின் அடிப்படையில், முதிர்வுத் திகதியில் செய்யப்படும்.<br>புதுப்பித்தலுக்காக நிலுவையில் உள்ள அதே நிலுவைத் தொகையைத் தொடர வேண்டுமா அல்லது மூலதன மீள்செலுத்தலாக இருக்க வேண்டுமா என்றும் முடிவு செய்யப்படும்.<br><br>**வரைவு வரம்பு**<br>- ஒரு வாகனத்திற்கான குறைந்தபட்ச வசதி வரம்பு LKR 500,000<br>- ஒரு வாகனத்திற்கான அதிகபட்ச வசதி வரம்பு LKR 10,000,000<br>- அதிகபட்ச வாகனக் கப்பல் வசதி வரம்பு LKR 25,000,000.<br><br>**வரைவு காலம்**<br>- வரம்பு 12 மாத காலத்திற்கு செல்லுபடியாகும்<br><br>நடைமுறையில் இருக்கும் வட்டி விகிதங்கள், வசதியைப் பரிசீலிக்கும் முன், வாடிக்கையாளருக்கு முதலில் தெரிவிக்கப்படும். |

| | |
|---|---|
| | கடன் வழங்கும் பொருட்களுக்கான வட்டி விகிதங்கள் வசதி வகை, பதவிக்காலம் மற்றும் வழங்கப்படும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பொறுத்தது. சந்தை நிலவரத்தின் அடிப்படையில், வட்டி விகிதங்கள் அவ்வப்போது மாற்றியமைக்கப்படுகின்றன.<br><br>**செலுத்தவேண்டிய வட்டி / மூலதனத்தின் மீது நிறுவனத்தின் தரநிலைகளின்படி இயல்புநிலை வட்டி பயன்படுத்தப்படும்.<br><br>**தகுதிக்கான தேவைகள்**:<br>இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜை<br><br>வயது 65 ற்குக் கீழ் (வயது விதிவிலக்கு ஒப்புதலுக்கு உட்பட்டது)<br><br>வணிகப் பிரிவு (SME’s) 01 வருடம் செயல்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>வாகன விற்பனையாளர்கள் / முகவர்கள்<br><br>வட்டி விகிதங்கள், கட்டணங்கள், வசதித் தொகை, திருப்பிச் செலுத்தும் காலம், இணைத் தேவை போன்ற முக்கிய விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் பிற சிறப்பு விதிமுறைகள், நிபந்தனைகள் என்பவை வசதியின் வகையைப் பொறுத்து மாறுபடும். ஒப்பந்தத்தில் நுழைவதற்கு முன் அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் கடன் வாங்குபவருக்கு ”சலுகைக் கடிதம்” மூலம் தெரிவிக்கப்படும். |
| **சேவையை பெறுவதற்கான நடைமுறைகள்** | ஆரம்பத்தில், கடன் வாங்கவிருப்பவர், தயாரிப்பு அம்சங்கள் மற்றும் தேவைகள் பற்றிய விபரங்களைப் பெற நிறுவனத்தின் ஒரு பிரதிநிதியை சந்திக்க வேண்டும்.<br><br>கலந்துரையாடலின் பிறகு, கடன் வாங்கவிருப்பவர் மற்றும் நிறுவனத்தின் பிரதிநிதி ஆகியோர் வசதிக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.<br><br>கடன் வாங்குபவர் உரிய விண்ணப்பப் படிவத்தை முறையாக பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களுடன் நிறுவனத்தின் பிரதிநிதியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெறப்பட்டவுடன், அது நிறுவனத்தால் செயலாக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். ஒப்புதல் செயல்பாட்டின் போது, கடன் பகுப்பாய்வு தேவையின் அடிப்படையில் கூடுதல் தகவல், ஆவணங்கள் அல்லது விபரங்களை சேகரிக்க வாடிக்கையாளர் / உத்தரவாததாரர்கள் தொடர்பு கொள்ளப்படுவார்கள்.<br><br>முதலில் கலந்துரையாடலின் போது பேசப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒப்புதல் கட்டத்தில் திருத்தப்படலாம், அதுபற்றி வசதியை வழங்குவதற்கு முன், விண்ணப்பதாரருக்கு நிறுவனத்தால் தெரிவிக்கப்படும்.<br><br>இந்த வசதி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டால், தேவையான சட்ட ஆவணங்கள் செயல்படுத்தப்படும் மற்றும் ஆவணங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு வசதிக்கான விநியோகம் நடைபெறும்.<br><br>ஒரு வசதியை அனுமதிப்பது அல்லது நிராகரிப்பது நிறுவனத்தின் |

| | |
|---|---|
| | சொந்த விருப்பத்திற்கு உட்பட்டது. |

**உரிய வட்டி வீதம்**

| வசதி / சேவை | வட்டி வீதம் | காலதாமதமான வட்டி விகிதங்கள் |
|---|---|---|
| லீசிங் (குத்தகை) | 16%- 38% p.a | 4% p.m |
| கடன் | 17% - 25% p.a | 2% p.m |
| கடன் காரணிப்படுத்தல் | 17%- 25% p.a | 10% p.m |
| தங்கக் கடன் வசதி | 20% - 24% p.a | 5%p.m |
| பாஸ்ட் டிரா.ஃ.ப்ட | 17% - 21% p.a | 4% p.m |
| காலாகால வைப்புக்களும் சேமிப்புக்களும் | வைப்பு வசதிகளுக்குரிய வட்டி வீதங்கள் வங்கிக் கிளைகளிலும், www.siyapatha.lk எனும் இணையத்தளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. | |
| நிலையான வைப்புத்தொகைக்கு எதிரான கடன் | சந்தை நிலவரத்திற்கு ஏற்ப நிறுவனத்தால் எல்லை தீர்மானிக்கப்படும். | |

- கடன் வசதிகளுக்கான வட்டி வீதமானது அக்கடன் வசதியின் வகை, கடனை அனுபவிக்கும் காலப்பகுதி மற்றும் அதற்காக வைக்கப்படும் பிணை என்பனவற்றைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும். சந்தை நிலவரங்களை கருத்திற்கொண்டு வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் திருத்தப்படலாம்.

## 02. ஏனைய அறவீடுகள், கட்டணங்கள் மற்றும் தரகுப்பணம்

- செயன்முறைப்படுத்தற் கட்டணம் மற்றும் காப்புறுதித் தவணைக் கட்டணங்கள், அரச வரிகள் (ஏற்புடையதெனில்), பெறுமதி மதிப்பீட்டுக் கட்டணம் ஆகியவற்றை கடன்பெறுநர் செலுத்த வேண்டும் என்பதுடன், கடன் வசதிகள் பற்றிய கலந்துரையாடலின்போது அவை தொடர்பில் தேவைப்படுத்தப்படும் விடயங்களும் குறிப்பான தகவல்களும் நிறுவனத்தினால் எடுத்துரைக்கப்படும். மேலும், சகல கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் பற்றிய விபரங்கள் கடன் வழங்கல் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

- கடன் வசதி வழங்கப்பட்ட காலப்பகுதியில், சேர்க்கப்படுகின்ற வசதியின் ஒரு பகுதியாக நிறுவனத்தால் வழங்கப்படும் கூடுதல் நலவுரித்துக்கள் அல்லது சில ஆகுசெலவுகள் நிறுவனத்தால் தள்ளுபடி செய்யப்படலாம். வாடிக்கையாளர் உடன்பட்டுக்கொண்ட இறுதி வாடகை / தவணை போன்றவை அத்தகைய கூடுதல் நலவுரித்துக்கள் அல்லது சில ஆகுசெலவுகள் என்பவற்றுக்குள் உள்ளடங்கும்.
- வைப்பாளர் ஒருவர் கடன் வசதியைக் கோரும்போது, அத்தகைய வைப்புக்களுக்கான உத்தரவாதங்கள், வட்டி வீதங்கள் மற்றும் அத்தகைய கடன் வசதிக்கு ஏற்புடையனவான அறவீடுகள் என்பன பற்றி அத்தகைய கடன் வசதி அங்கீகரிக்கப்படும்போது தெரிவிக்கப்படலாம்.

## 03. ஏற்புடையதாகக்கூடிய சட்ட ஏற்பாடுகள்

- 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம், 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அடகுச் சட்டம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை மற்றும் இலங்கையில் வலுவிலுள்ள பொருத்தமான ஏனைய சட்டங்கள் என்பவற்றுக்கமைய வசதிச் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 04. இரகசியத்தன்மை

- 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, வாடிக்கையாளர்களின் எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்குமான பூரண இரகசியத்தன்மை கம்பெனியால் பேணிக்காக்கப்படும்

## 05. 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்

- ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது அவ்வாறான ஒன்றுக்கு முயற்சித்தல், ஏதேனும் சட்டவிரோத செயல் அல்லது வேறு ஏதேனும் குற்றவியல் தவறாக அமையலாமென சந்தேகிக்கப்படும் அளவுக்கு சாத்தியக்கூறுகள் இருப்பின், நிறுவனமானது அதுபற்றி 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நிதிசார் உளவறிதல் பிரிவுக்கு அறிவிக்க வேண்டும்.

## 06. முறைப்பாடுகளைக் கையாளும் செயன்முறை

- தலைமை அலுவலகத்தில் முறைப்பாடுகளை கையாள்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரை எந்தவொரு கிளையிலிருந்தும் அவசர அழைப்பு இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொள்ள முடியும். அதற்கு மேலதிகமாக கிளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கங்களுக்கூடாக நிதிசார் ஒம்புட்ஸ்மனின் சேவையைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

**தொடர்புகொள்வதற்காக**

- +94 117 581 333 எனும் இலக்கத்தினூடாக அழைப்பு நிலையத்தை தொடர்புகொண்டு ஏதேனும் விடயம் பற்றி அறிந்துகொள்ளவும் முடியும்.
- customerrelations@siyapatha.lk என்ற மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்புகொள்ள முடியும்.

வாடிக்கையாளர் அலுவல்களுக்குப் பொறுப்பான முகாமையாளரைத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி சியபத கோபுரம், இலக்கம் 111, டட்லி சேனாநாயக்க மாவத்த, கொழும்பு 08. இலங்கை.

- www.siyapatha.lk என்ற இணையத்தளத்தினுள் பிரவேசித்து "எம்மைத் தொடர்புகொள்ளுங்கள்" என்ற பக்கத்திற்குச் சென்று செய்தியொன்றை அனுப்பலாம்.

நிறுவனத்தால் எடுக்கப்படும் முடிவு தொடர்பில் திருப்தியடையாத வாடிக்கையாளர்கள், இலங்கையின் நிதிசார் ஒம்புட்ஸ்மனிடம் முறைப்பாடுகளைச் செய்யலாம்.

நிதிசார் ஒம்புட்ஸ்மன், நிதிசார் ஒம்புட்ஸ்மன் அலுவலகம், இலக்கம் 143ஏ, வஜிர வீதி, கொழும்பு – 05.

தொலைபேசி இல: +94 11 259 5624 / தொலைநகல்: +94 11 259 5625 / மின்னஞ்சல்: fosril@sltnet.lk / இணையத்தளம்: www.financialombudsman.lk

*வசதிகள் பற்றிய அம்சங்களைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவும் வகையில், சியபத பினான்ஸ் பீ.எல்.சீ வழங்கும் வசதிகள் மற்றும் சேவைகளின் முக்கிய அம்சங்கள் இந்த ஆவணத்தில் தரப்பட்டுள்ளன. நிறுவனத்திற்குள்ள முழு அதிகாரத்திற்கிணங்க எச்சந்தர்ப்பத்திலும் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள ஏதேனும் நியதி நிபந்தனையையும் மற்றும் அறவீடுகள் பற்றிய விதிகளையும் திருத்துவதற்கான உரிமை குறித்த நிறுவனத்துக்கு உண்டு.*